முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருநாவுக்கரசர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

17.09.2018, திங்கட்கிழமை

1. **கந்தனே ஞான வடிவாக வந்த**
   **கருணைபட அரங்கன் உருவில்**
   **சிந்தைபட ஓங்கார ஞானமருளி**
   **சிறப்பறிவு ஊட்டி மக்களை மீட்கும்**
2. மீட்கும் மாதரும சேவை ஆற்றிவர
   மேலான அரங்கமகா ஞானியரால்
   மீட்பு உலகம் அடையுமெனக் கூறி
   மொழிகுவேன் ஒளி சூட்சும நூலை
3. நூலை **விளம்பி நங்கை திங்கள்**
   **நிலமதனில் ஏக திகதி சோமவாரம்**
   **(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 1ம் நாள் 17.09.2018, திங்கட்கிழமை)**
   **ஞாலமதில் திருநாவுக்கரசர் யானும்**
   நாட்டிடுவேன் உலகோர் நலம் பெற
4. நலம்தரும் ஞானவழிக் கொள்கையை
   நாட்டிடுவேன் உலக மக்களெல்லாம்
   பலம் தரும் வண்ணம் ஏற்று நடக்க
   பணிந்து அரங்கமகானை நம்பி
5. நம்பியே முழு சரணடைவு கொண்டு
   நாளும் வழிபாடுகள் செய்து
   இம்மையின் இடர்களை அறுத்து
   ஈடேற்றுவாய் குருவே என வணங்கி வர
6. வருகவே தீட்சை பலம் அடைய
   வல்லமையான தரும பலமும் அடைய
   திருவடி தீட்சை ஞானியரிடம் ஏற்று
   தொடர் தருமத்தில் பங்களிப்பு செய்து
7. செய்துமே சீடர்களாகி அகலா
   சேவையில் தொடர்ந்து வருக
   மெய் ஞானம் அடைவது உறுதி
   மேல்கதியை பெறுவதும் உறுதி
8. உறுதி கொண்டு ஓங்கார குடிலை
   உலகோர் அணுகி தவமியற்றி
   அறம்தனை உலகெங்கும் வளர
   அரங்க மகான் அனுமதி பெற்று செயல்பட

9. செயல்பட தரும சக்தி பரவி
செப்பிடுவேன் கலியுகம் தானும்
தயவுமிக்க தரும யுகம் ஆகும்
தண்டாயுதன் ஆளுமைக்கு ஏற்ற

10. ஏற்ற ஞானபூமி நியாய பூமியாகி
எங்கும் எதிலும் தருமமென
மாற்றம் கண்டு கலியுகமே
மனபக்குவம் பெற்ற மக்கள் நிரம்பி

11. நிரம்பியே பாதக செயல்களில்லா
நீதிநெறி வாழ்வாய் மாறி
வரம்பெனும் பிரணவ சக்திக்குள்ளே
வையகமே அடங்கி ஞான உலகாகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் திருநாவுக்கரசர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஞானபண்டிதன் முருகப்பெருமானே ஞானமே வடிவாக கருணையோடு உலகோர்க்காக அரங்கன் உருவினில் வந்துதித்து மக்களுக்கு ஓங்கார ஞானம்தனை அருளி சிறப்பறிவு ஊட்டி மக்களை அறியாமையெனும் இருளிலிருந்து மீட்கும்விதமாக வல்லமையுள்ள மாதருமங்களை தளராது தொடர்ந்து செய்து வருகின்றார். மேன்மைமிக்க மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரால் இந்த கலியுகம் மாறி ஞானயுகமாக மாறிடும் எனக் கூறியே உலக நலம் கருதி ஒளி சூட்சும நூல்தனையே **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் முதல் நாள் 17.09.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே திருநாவுக்கரசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருநாவுக்கரசர்.

உலக மக்களே எல்லா நலங்களையும் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானவழிக் கொள்கையை முழு நம்பிக்கையோடு ஏற்று நடந்திட வேண்டும். ஆறுமுக அரங்கனை முழு நம்பிக்கையோடு நம்பி அரங்கன் கொள்கை வழி நடந்திட்டால், அரங்கனை முழுச் சரணாகதி அடைந்து, வழிபாடுகளை தவறாமல் செய்து நடந்திட்டால் அரங்கன் திருவடி பணிந்து அரங்கமகா ஞானகுருவே, எம்பெருமானே, எமது தெய்வமே, எம்மையும் ஒரு பொருட்டாய் மதித்து எமது இம்மையின் இடர்களைக் களைந்து ஈடேற்றித் தருவாய் என்றே மனம் உருகி வேண்டுகோள் வைத்து வணங்கி வரவர, அரங்கனின் கொள்கைகள் அனைத்தும் கடைப்பிடிப்போர்க்கு முழுப்பலனை தந்திடுமப்பா.

அரங்கனின் கொள்கைகளை கடைப்பிடிக்கும் அவரெல்லாம் அரங்கமகா தேசிகனாரிடத்து திருவடி தீட்சை உபதேசம் அடைந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உலக நலன் கருதி உலக உயிர்கள்பால் கருணைக் கொண்டு ஆற்றும் தானதரும அறப்பணிகளுக்கு பொருளுதவிகள் செய்து, தரும பலத்தினையும் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

அரங்கனை முழுமையாக நம்பி குருவாய் ஏற்று, அரங்கமகானை போற்றி வணங்கி, தீட்சை உபதேசம் அடைந்து, கடைத்தேற்றும்படி அரங்கனிடத்து வேண்டுகோள் செய்வதுடன் தருமங்களை செய்து அரங்கனின் அன்பிற்கு பாத்திரமாகி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர்களாக ஆகி அரங்கன் மனம் கோணாமல் நடந்து அரங்கனை விட்டு நீங்காமல் பின்தொடர்ந்து தொண்டுகளை குறைவின்றி தொடர்ந்து செய்து வரவர, அரங்கமகானின்

கருணையினால் அச்சீடர்கள் எல்லாம் மெய்ஞானம் அடைவது உறுதியப்பா, மேல்கதியை பெறுவதும் உறுதியப்பா.

தவம் செய்தே ஜென்மத்தை கடைத்தேற்றிக் கொள்ள வேண்டும். அரங்கனை விட்டு ஒரு போதும் அகலேன் என்றே மனஉறுதியுடன் உலகமக்கள் ஓங்காரக்குடிலினை அணுகி தவம் இயற்றி உலகமெங்கும் அறத்தினை வளர்த்திட வேண்டியே அவரவரும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து வேண்டுகோள் வைத்து உலகினில் தர்மம் செய்திட அனுமதி பெற்று அரங்கரின் ஆசியுடன் செயல்பட செயல்பட உலகமெங்கும் தருமத்தின் சக்தியானது பரவி துன்பம்மிக்க இந்த கலியுகமும் தயவுமிக்க தருமயுகமாக மாறிடும்.

தருமயுகமாக கலியுகம் மாறியே தண்டாயுதபாணி முருகப்பெருமான் நேரில் தோன்றி ஆட்சி செய்ய ஏற்ற வகையில் தரும பூமியாகவும், ஞானபூமியாகவும் ஆகி சத்தியமும், சமதர்மமும் மிகுந்த சமநீதியுடைய நியாய பூமியாக ஆகிடும். ஆறுமுகனாரின் ஆட்சி பெற்றிட ஞானபூமியாக ஆகிட மாற்றமடைந்து உலகமெங்கும் எங்கும் எதிலும் தருமமே மேலோங்கி மாற்றம் கண்டு இந்த கலியுகம் முழுதும் உலகமெங்கும் உள்ள மக்களெல்லாம் மனப்பக்குவம் உள்ள மக்களாக மாறி உலகமெங்கும் பாதக செயல்கள் இல்லாத நீதிநெறி வாழ்வினை வாழும் நன்மக்களாக ஆகி எல்லையில்லா சக்திகளின் எல்லையாக விளங்கிடும் ஓங்கார சக்திக்குள்ளே இந்த உலகமே அடங்கி ஓங்காரநாதனான முருகப்பெருமானின் கருணையாலே ஞானஉலகமாக ஆகிடுமப்பா என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகோர்க்கு ஞான உலகம் அமையும் முறைமையும், உலகோர் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகளையும் எடுத்துரைக்கின்றார் மகான் திருநாவுக்கரசர்.

–சுபம்–